மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்பது என்பது தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். மாநில அரசு, இத்திட்டத்தை சட்ட பூர்வமாக அமுல்படுத்த தற்போது வழி வகையில்லை, ஆயினும் மத்திய அரசு இது குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வர உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

தனியார் பஸ் தொழிலாளர் சங்கக் கோரிக்கை.

* 3533 திரு. செ. நூர்முகமது :

திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து தனியார் பஸ் தொழிலாளர் சங்கத்திடமிருந்து பணி பாதுகாப்பு, ஊதிய மாற்றம் மற்றும் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்து 10—2—1989 அன்று கோரிக்கை மனு ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் இது குறித்துப் பதில் சொல்லுகின்றபோது இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வரவில்லை என்ற முறையில் பதிலளித்தார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி 10—2—1989 ல் தனியார் போக்குவரத்திலே பணி புரியக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்களிலே பணி புரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளம், சலுகைகள் எல்லாம் ஓரளவு நியாயமாகக் கிடைக்கும் நிலையில், தனியார் போக்குவரத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலியில், ஒரு சலுகைகூட இல்லாமல், நிரந்தரமற்ற முறையில், கொத்தடிமைகளைவிட கேவலமான நிலையில் வாழ்ந்து

கொண்டிருக்கிறார்கள். நான் உங்களைப் பார்த்து வேண்டிக் கொள்வதெல்லாம், நம்முடைய அரசு எப்போதெல்லாம் கட்டணத்தை உயர்த்துகிறதோ அப்போதெல்லாம் அவர்களும் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிக்கிறோம். அவர்கள் அதிக மான லாபத்தை ஈட்டுகிறார்கள். எனவே நம்முடைய கழகம் கொடுக்கும் சம்பளம், சலுகைகளை ஏனைய தனியார் நிறு வனங்களும் கொடுக்க முடியாதா? எனவே அதற்கு ஏதேனும் உத்தரவிட்டு, அரசு கழகங்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், சலுகைகள் தனியார் போக்குவரத்திலும் கொடுக்கப் பட வேண்டுமென்று சொல்லி அரசு கராராக அதை அமல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இது போல ஒரு கடிதம் 10—2—1989 வரவில்லை என்று தெரிவித்தபோது, அவர்களுக்கு தெரிந்தளவில் கடிதம் எழுதி இருப்பதாக அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். 10—2—1989 அன்று அரசுக்கோ அல்லது தொழிலாளர் ஆணையருக்கோ தனியார் பஸ் தொழிலாளர் சங்கத்தின் சார்பாகக் கடிதம் ஏதும் வரவில்லை. ஆனால் 27—8—1988, 5—9—1988, 25—9—1988, 10—10—1988, 29—3—1989 ஆகிய நாட்களில் சங்கங்களிலிருந்து ஆணைய ருக்குக் கடிதம் பெறப்பட்டது. அப்படி அந்தச் சங்கங்களி லிருந்து கடிதம் பெறப்பட்டதனைக் காரணமாக வைத்து துணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் கொண்ட குழுவை அமைத்து, திருநெல்வேலி மற்றும் தூத்துக் குடியில் இருக்கின்ற, திருநெல்வேலியில் இருக்கின்ற 11 கம்பெனிகளிலும், தூத்துக்குடியில் இருக்கின்ற 3 பஸ் கம்பெனி களிலும் ஆய்வு செய்யச் சொல்லப்பட்டது. அவர்கள் ஆய்வு செய்து, அங்கு தொழிற்சங்கங்களுக்கும், அங்கு பணி புரிகின்ற தொழிலாளர்களுடைய தொழிற்சங்கத்திற்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, குறைந்த பட்ச ஊதியமும் அவர்களுக்குத் தர வேண்டிய சீருடைகளெல் லாம், காலணியெல்லாம் வழங்கப்பட்டது என்று அறிவித்து இருக்கின்றனர். மேலும், திருநெல்வேலியில் இருக்கின்ற கணபதி மோட்டார்ஸ், கணபதி டிரான்ஸ்போர்ட் போன்ற நான்கு நிறுவனங்களில் அங்கிருந்து ஒரு மனு வரப்பெற்று அவை களை ஆய்வு செய்யப்பட்டதில் அந்த நிறுவனம் அவர்களுக்குச் சரியான முறையில் குறைந்தபட்சக் கூலியும் மற்ற சீருடை, காலணியெல்லாம் வழங்கவில்லை என்று தெரிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளப் பட்டுவாடாச் சட்டம், நிலை ஆணைச் சட்டம், சேவைக் கால விதிகளைப் பகிரங்கமாக மீறி வருகிறார்களே அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டனவா? ஆமெனில், எத்தனை நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

9–50 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் பஸ் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் நமது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் நிச்சயமாக வருவார்கள். அப்படித் தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த பஸ் கம்பெனியிலாவது, குறிப்பிட்டு அவர்கள் இது போல அமல்படுத்தவில்லை என்று தெரிவிப்பார்களானால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே இதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு முறை தனியார் பஸ் தொழிற்சங்கம் சார்பாக மனுக்கள் தரப்பட்டு, மனு தரப்பட்ட இடங்களில் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு அங்கு யார் யார் மீறியிருக்கிறார்களோ அவர்கள் மீது அரசின் விதி எண் 36 மற்றும் 35-இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எந்தத் தனியார் பஸ் நிர்வாகத்தினராக இருந்தாலும், குறைந்தபட்ச ஊதியமோ அல்லது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் அரசின் சார்பாகச் சட்ட விதிகளின்படி கிடைக்கக் கூடிய விதிகளின்படி கிடைக்கவில்லை என்றால் நிச்சயமாக அரசின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' பத்திரிகை

* 5808 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

'தமிழரசு' பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழரசு " பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் இலவசமாக வழங்கும் நடவடிக்கை குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS